கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 136/2020

வாதி தரப்பு சாட்சி 1 ரவிசந்திரன் திருமதி.ஏ.பிரேமா, பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.08.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரவிசந்திரன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | முத்துவீரன் | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 54 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எனது தகப்பனார் 1, 2 பிரதிவாதிகளிடம் தான் மனை வாங்கினார் என்றால் சரிதான். எனது தகப்பனார் எந்த அளவில் கிரையம் வாங்கினார் என்றால் கிழமேல் தென்வடல் 100 அடி, மேற்குபுறம் தென்வடல் 107 அடி, வடபுறம் கிழமேல் 30 அடி, தெற்குபுறம் கிழமேல் 16 அடி ஆ 17-2021 கும். மேற்படி அளவுகளில் தான் 1 ,2 பிரதிவாதிகள் கிரைய ஆவணம் எழுதி கொடுத்தார்களா என்றால் சரிதான். எனக்கு வழக்குரையில் கிழமேல் அளவுகள் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்திற்கு மட்டும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய சொத்திற்கு கிழபுறமும் வடபுறம் , தெற்கு ரோடு உள்ளது.

2. மேற்கே கலப்பு காலனி உள்ளது. எனது தகப்பனார் கிரையம் வாங்கிய நிலத்தை ஒட்டி மேற்கே எனது தந்தைக்கு தனிப்பட்ட சொத்து எதுவும் இல்லை என்றால் சரிதான். எனது தந்தை 3088 சதுரடி நிலத்தை கிரையம் வாங்கியிருந்தாலும் நான் 5523 சதுரடி நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா-ஆ.2 ன் படி எனது தகப்பனார் தற்போது உயிருடன் உள்ள நிலையில் எனக்கு அதில்உரிமை இல்லை என்றால் சரிதான். எனது தந்தை உடல் நிலை நல்ல நிலையில் தான் உள்ளார் என்றால் சரியல்ல. அவருக்கு கண்பார்வை கிடையாது. கை மூட்டு விலகியதால் அவரால் சரிவர நடக்க முடியாது.

3. மேலும் கேட்கும் கேள்விகளை புரிந்த கொண்டு சரிவர பதில் சொல்ல தெரியாது. மேற்படி சங்கதிகளை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க அனுமதி பெற்றுள்ளேன். தாவா மாதிரி வரைபடத்தில் அளவுகள்ளதுவும் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான்.

**வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
Kulithalai.